கரூர் தாந்தோணி அரசு கலைக் கல்லூரியில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீவைத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, தேர்வானவர்களுக்கு பணி நியமன உத்தரவுகளை வழங்கினார். உடன் கரூர் மாவட்ட கலெக்டர் மீ தங்கவேல், கரூர் தொகுதி எம்.பி. செ. ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம் குளித்தலை, ஆர் இளங்கோ அரவக்குறிச்சி, கே சிவகாமசுந்தரி கிருஷ்ணராயபுரம், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன் மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன் கோவை மண்டல வேலைவாய்ப்புத்துறை இணை இயக்குனர் ஆ.ஜோதிமணி, மண்டல குழு தலைவர் எஸ்.பி.கனகராஜ், ஆகியோர் உள்ளனர்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில்

சேலம் மாவட்டத்தில் 18 இணைகளுக்கு திருமணம்!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் நடத்தி வைத்து வாழ்த்துரை!

சேலம், அக். 22-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்துத்தரப்பு மக்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில் பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம், நங்கவள்ளியில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் திருமண விழாவினை நடத்தி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறை திருக்கோவில்கள் சார்பில் சென்னையில் நடைபெற்ற திருமண விழாவில் 31 இணைகளுக்கான திருமண விழாவினை நடத்தி வைத்ததைத்தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேற்று (21.10.2024) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோவிலில் திருமண விழாவினை நடத்தி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் வியந்து பார்க்கும் வகையில் சிறப்பான ஆட்சியை வழங்கி வருகிறார்கள். குறிப்பாக, அனைத்துத்தரப்பு மக்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் இந்து சமய அறநிலையத்துறையின் வாயிலாக இதுவரை இல்லாத வகையில் அதிக அளவிலான திருக்கோவில்கள் சீரமைக்கப்பட்டு குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 2024-2025-ஆம் ஆண்டின் சட்டப்பேரவை அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் நடைபெறும் திருமண விழாவில் சென்னை மாவட்டத் திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கான திருமண விழாவினைத் தலைமையேற்று இன்றையதினம் நடத்தி வைத்துள்ளார்கள்.

இதனைத்தொடர்ந்து, இன்றையதினம் சேலம் மாவட்டத்தில் 18 இணைகளுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளன. இதில் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோவிலில் 10 இணைகளுக்கும், வாழப்பாடி வட்டம், பேளூர், அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோவிலில் 8 இணைகளுக்கும் என 2 பகுதிகளுக்கும் சேர்த்து 18 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டுள்ளன. இத்திருமண விழாவில் மணவாழ்வினைத் தொடங்கும் தம்பதியினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், புதுமண தம்பதியினருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 4 கிராம் தங்கத்தில் திருமாங்கல்யம், கைக்கடிகாரம், பூஜை பொருட்கள், கட்டில், பீரோ, மெத்தை, மிக்ஸி மற்றும் பாத்திரங்கள் உள்ளிட்ட 13 பொருட்கள் சுமார் ரூ.60,000/- மதிப்பிலான சீர்வரிசைகளுடன் திருமண விழா நடத்தி வைக்கப்பட்டுள்ளன. புதுமண தம்பதிகள் அனைத்து வளங்களையும் பெற்று வாழ்வில் சிறந்து விளங்க மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் அவர்கள் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் திருமதி சபர்மதி, உதவி ஆணையர் ராஜா, மாவட்ட அறங்காவலர் நியமனக் குழுத்தலைவர் கே.ஆர். முருகன், செயல் அலுவலர் திருமதி சுதா மற்றும் அர்த்தநாரி உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கினங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மதுரை தெற்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் நடைபெற்றதில், மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ, தொகுதி பொறுப்பாளர்கள் சிவகாசி த.வனராஜா, டிஸ்கோ எம்.அலாவுதீன், ப.செல்லத்துரை, கழக நிர்வாகிகள் நாகராஜ், வக்கீல் ஆர்.பாலாஜி, சிவனாண்டி, கொம்பாடி தங்கம், ஏர்போர்ட் பாண்டியன், லதா அதியமான், செல்லம்பட்டி முத்துராமன், கே.இளமகிழன், ம.முத்துராமலிங்கம், கொடி சந்திரசேகர், ஆர்.பாண்டியன், ஞானசேகரன், தங்கப்பாண்டியன், விமல், சேதுராமன், சிவமுருகன், பி.எஸ்.என்.எல். செல்வம், ஆதிமூலம், கொ.தனபாண்டியன், ராமமூர்த்தி, மதன்குமார், சுதாகரன், ஸ்ரீதர், எஸ்.ஓ.ஆர் தங்கபாண்டியன், சரவணகுமார் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில் 2026 தேர்தலில்

4 சட்டமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம்!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்: அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை. அக். 22.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் மாவட்ட கழக செயற்குழு கூட்டம் காரைக்குடியில் தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் த.சேங்கைமாறன் வரவேற்றுப் பேசினார்.

இந்த கூட்டத்தில் திருமதி தமிழரசிரவிக் குமார் எம்.எல்.ஏ. சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் டாக்டர் என். சுந்தர் ராஜன், திருப்பத்தூர், கே.முருகவேல், காரைக்குடி, சண்முகம் சிவகங்கை, பி.கே.என்.போஸ் மானாமதுரை ஆகியோர் கலந்து கொண்டு வருகிற 2026சட்டமன்ற தேர்தலில் பணியாற்ற வேண்டியது குறித்து விளக்கி பேசினார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டுறவுத் துறை அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது. வருகிற 2026ல் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது .அதில் கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் 200 தொகுதிகளை கைப்பற்ற வேண்டும் என்று திட்டமிட்டு அதற்கான வீயூகத்தை அமைத்து செயல்பட்டு வருகிறார் . நாம் கடந்த பாராளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளில் 200க்கும் மேற்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்றுள்ளோம். ஆனால் முதல்வர் அவர்கள் 200 தொகுதியில் மட்டும் வெற்றி பெற்றால் போதும் என்று அறிவித்துள்ளார்.

இதில் சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்ற தொகுதிகள் உள்ளது. நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கு பார்வையாளர் களை கழகத்தலைவர் அவர்கள் நியமித்துள்ளார். அவர்களுக்கு அனைத்து நிர்வாகிகளும் ஒத்துழைப்பு தர வேண்டும். வெற்றி ஒன்றே நமது இலக்காக அமைத்து செயல்பட வேண்டும். நான்கு தொகுதிகளிலும் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் யார் நின்றாலும் அதைப்பற்றி நாம் கவலைப்படாமல் வெற்றி ஒன்றே இலக்காக கருதி அனைவரும் ஒற்றுமையுடன் தேர்தல் பணியாற்ற வேண்டும்.

இந்த வெற்றியை கழக தலைவர் தளபதி அவர்களின் காலடியில் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசினார். காரைக்குடி மாநகர செயலாளர் துணைமேயர் என். குணசேகரன் நன்றி கூறினார்.

இந்த கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில்குமார், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

திருக்குவளைக்கு - உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் வருகை!

முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன் பங்கேற்பு!

நாகை, அக்.22-

நாகை மாவட்டம் திருக்குவளை உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த இல்லத்திற்கு உயர் கல்வித் துறை அமைச்சராக பொறுப்பு ஏற்றுள்ள கோவி.செழியன் வருகை தந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி அவர்களின் தலைமையிலான கழக அரசில் புதிதாக பொறுப்பு பொறுப்பு ஏற்றுள்ள உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் நாகை மாவட்டம் திருக்குவளையில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த இல்லத்திற்கு வருகை தந்தார். கலைஞர் இல்லத்திற்கு வருகை தந்த உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியனுக்கு நாகை மாவட்ட கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என். கௌதமன் தலைமையில் வரவேற்பு வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கலைஞர் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதைத் தொடர்ந்து முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். முன்னதாக கலைஞர் அவர்களின் தாயார் அஞ்சுகம், தந்தை முத்துவேலவர் ஆகியோர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செ.இராமலிங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், க.ராஜேந்திரன், க.மறைமலை, மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர்மணிவண்ணன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், சோ.பா.மலர்வண்ணன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என். ஆனந்த், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் இல.பழனியப்பன், எஸ்.பி.டி.சார்லஸ், கோசி.குமார், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர் சத்தியமூர்த்தி, மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் பி.தியாகராஜன், செந்தில், வி.எம்.கே.பாலாஜி, லோகு, சண்முகராஜ், குவளைகணேசன், சண்முகநாதன், ஒன்றிய நிர்வாகிகள் பார்த்திபன், சுரோஷ், ஜெயந்திமாசிமாணி, கிளை செயலாளர் குண்டூர் சண்முகம் ஒன்றிய குழு உறுப்பினர்கள் சிவபாலன், சுதாஅருணகிரி மற்றும் ஒன்றிய, கிளைக் கழகத் தினர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை,அக். 22-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் வருகின்ற 24.10.2024 வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட திமுக அலுவலகம் பெரியண்ணன் மாளிகையில் உள்ள கீரை தமிழ்ச்செல்வன் அவை கூடத்தில்

மாவட்ட அவைத்தலைவர்அரு.வீரமணி தலைமையில் நடைபெறுகிறது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன்,

புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளர், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் வண்ணை அரங்கநாதன், விராலிமலை சட்டமன்ற தொகுதி பார்வையாளரும், தஞ்சை துணை மேயர் அஞ்சுகம் பூபதி, , கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளர், கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் கார்த்திக்கேயன் என். வேல்ச்சாமி ஆகியோர் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர். எம்.எம்.அப்துல்லா எம்.பி. டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ.

முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு,

கவிச்சுடர் கவிதைப் பித்தன் , மேயர் திலகவதி செந்தில், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், புதுக்கோட்டை விஜயா, த.சந்திரசேகரன், பி.டி.அரசக்குமார், வி. என். மணி, சுப.சரவணன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, செ.அசோக்பாண்டியன், கே.ஆர்.என்.போஸ்,

எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி, கீரை. தமிழ்ராஜா, சு.சண்முகம், ஆ.செந்தில் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்நிகழ்வுகளில் பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

பொருள்: தொகுதி பார்வையாளர்கள் அறிமுகம். வாக்காளர் பட்டியல் சரிப்பார்த்தல், அக்29 முதல் நவ 28 வரை பெயர் சேர்த்தல், நீக்கம் OMR படிவம் குறிப்பேடு. சார்பு அணிகளின் ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் பட்டியல். கழக ஆக்கப்பணிகள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறை திருக்கோவில்கள் சார்பில் சென்னையில் நடைபெற்ற திருமண விழாவில் 31 இணைகளுக்கான திருமண விழாவினை நடத்தி வைத்ததைத்தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேற்று (21.10.2024) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோவிலில் திருமண விழாவினை நடத்தி வைத்தார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி சபர்மதி, உதவி ஆணையர் ராஜா, மாவட்ட அறங்காவலர் நியமனக் குழுத்தலைவர் கே.ஆர். முருகன், உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாகர்கோவில் மாநகராட்சி சார்பில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு முகாம் மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. முகாமில் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரும் தி.மு.க. மாநில மருத்துவ அணி தலைவருமான மருத்துவர். கனிமொழி என்.வி.என். சோமு, ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினரும், தி.மு.க. மாநில மருத்துவர் அணி செயலாளருமான மருத்துவர். எழிலன் நாகநாதன் ஆகியோர் கலந்து கொண்டு புற்றுநோய் விழிப்புணர்வு தொடர்பான கருத்துரையாற்றினர். மேலும் மருத்துவர்கள் சிவராம் கணேசமணி, பி.சுதாகர் ஆகியோர் புற்றுநோய் தொடர்பாக படக்காட்சிகள்களுடன் விளக்க உரையாற்றினார்கள்.